**தலைப்பு 248 – இலங்கை மதுவரித் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மதுவரித் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மதுவரித் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6.1 (ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.7 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக கடந்த ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் நிகழ்ச்சித்திட்டங்களின் பிரகாரம் செலவும் பொழிப்பு ACA – 2 படிவத்தில் குறிப்பிடப்பட்ட புனரமைப்புச் செலவுகளுக்கான மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,168,500,000 ஆகவும் மொத்த புனரமைப்புச் செலவு ரூபா 936,801,576 ஆகவும் காட்டப்பட்டிருந்தது. நிதிக்கூற்றுக்களின் ACA-2(ii) படிவத்தின் பிரகாரம் அது முறையே ரூபா 1,159,800,000 மற்றும் ரூபா 928,392,355 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | சரியான தரவுகளை உள்ளடக்கவதற்கு நடவடிக்கை எடுத்தல் | சுட்டிக்காட்டியதற்கு மதிப்பளிக்கின்றேன் நிதி ஏற்பாடுகளின் பெறுமதியும் ஆண்டிற்கான செலவுகளின் பெறுமதியும் தவறுதலாக கூட்டப்பட்டிருக்காததன் காரணமாக இடம் பெற்றிருந்தது. |

## 1.6.2 நிதி நிலமை தொடர்பான கூற்று

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகளின் கீழான செலவுத் தலைப்புக்களின் பிரகாரம் நிதிச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 107,562,052 செலவு செய்யப்பட்டிருந்தும் நிதியற்ற சொத்துக்களின் கீழ் (ACA-6) கொள்வனவாக அது ரூபா 56,420,700 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற சொத்துக்களை நடைமுறை வேலையின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதன் கீழ் ரூபா 107,562,052 காட்டப்பட்டிருந்தும் அவற்றினுள் நிர்மாணிக்கப்பட்டு வருபவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனினும் ACA-6 இன் கீழ் காட்டப்பட்டுள்ள பணமாகிய ரூபா 56,420,700 உண்மையாக கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதியாகும். |
| (ஆ) முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்களின் ரூபா 982,032,375 மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,371,338,801 ஆக செம்மையாக்குவதற்கான நாட்குறிப்பு பதிவுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | செம்மையாக்குவதற்குரிய நாட்குறிப்பு பதிவுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | 2018 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட இறுதிக் கணக்குகள் குறைபாடுகளைக் கொண்டிருந்ததனால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சரியான மீதியான ரூபா 1,371,338,801 நிதியற்ற சொத்துக்களாக 2019 ஆம் ஆண்டிற்கான கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. அப் பெறுமதியானது திறைசேரி அச்சுப் பிரதிகளில் காட்டப்பட்ட பெறுமதிக்கு சமமானதாகும். |
| (இ) மீளாய்வாண்டில் ரூபா 45.567,770.77 பெறுமதியான கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் நடைமுறை வேலைப் பெறுமதியின் கீழ் நிதியற்ற சொத்துக்களாக நிதி நிலைமை தொடர்பான கூற்றுக்கு கொண்டுவரப்பட்டிருந்தன. | சரியான வகைப்படுத்தலின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் | ACA–6 படிவத்தினை தயாரிக்கும் போது இப் பெறுமதியானது நடைமுறை வேலைக் கட்டிடம் மற்றும் நிர்மாணங்களாக காட்டப்பட்டுள்ளதுடன் ACA – 6 படிவத்தின் கூட்டு மொத்த தொகையானது நிதி நிலைமை தொடர்பான கூற்றில் உள்ளடக்கபடப்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டன. |

### 1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| கட்டு நிதிக் கணக்கின் வருட ஆரம்ப மீதியான ரூபா 29,735,446 தொகை மற்றும் கட்டு நிதிக் கணக்கின் திணைக்கள ஏற்பாடுகளுக்கும் திறைசேரி அச்சுப் பிரதிகளுக்குமிடையேயான வித்தியாசமான ரூபா 45,475,138 ஆகிய இரண்டு தொகைகளின் கூட்டுத் தொகையான ரூபா 75,210,584 பணம் வருமானமற்ற பெறுவனவாகக் காட்டப்பட்டிருந்தது. | 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | 7041629 ஆம் இலக்க வங்கி கணக்கின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறுதி மீதியானது 2019 ஆம் ஆண்டின் போது கட்டுநிதி பெறுவனவாக அதிகாரத்தை பொறுப்பேற்று 2019 திசெம்பர் 31 ஆந் திகதி திறைசேரிக்கு அனுப்பிய இறுதிக் காசோலை தவறுதலாக CIGAS நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 3,355,000 பெறுமதி உள்ளடக்கப்பட்ட ரூபா 45,475,138 மொத்த தொகை மற்றும் ரூபா 29,735,446 இன் மொத்த தொகை வருமானமற்ற பெறுவனவாகவும் காட்டப்பட்டிருந்தது. |

### 1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) கடன் மற்றும் முற்பணங்கள் பதிவேடு (cc-10) மற்றும் முற்பணக் கணக்குகளுக்குரிய இணக்க கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனித்தனி மீதிகளானது உப பதிவேட்டில் குறிப்பிட்ட கடன் மீதிகளுக்கிடையே செம்மையாக்கப்படாதிருந்த 09 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | கடன்கள் மற்றும் முற்பணங்கள் பதிவேட்டில் சரியாக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | இந்த ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவு செய்து தெரிவித்துக்கொள்கிறேன். |

| | | |
|---|---|---|
| (ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதியானது கடன்கள் மற்றும் முற்பணங்கள் பதிவேட்டின் (சீ.சீ.10) பிரகாரம் ரூபா 194,703 ஆக இருந்ததுடன் அம் மீதியினை கணக்கிணக்க கூற்றின் தனித்தனி மீதிகள் துணைப் பதிவேட்டில் பதிவு செய்யும் போது ரூபா 209,885 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது. | கடன்கள் மற்றும் முற்பணங்கள் பதிவேட்டினை சரியாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | தவறுதலாக இவரின் கடன் மீதியானது தனித்தனி மீதிகள் பட்டியலில் காட்டப்பட்டுள்ளதுடன் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனத் தெரிவிக்கின்றேன். |

**1.6.5 கட்டுநிதி மீதி**

கட்டுநிதி மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) திணைக்களத்தின் ஒன்றித்த பரீட்சை மீதியின் பிரகாரம் இனங்காணப்பட்ட இரண்டு கட்டுநிதிகளின் கூட்டு மொத்தம் ரூபா 115,059,294,193 தொகையும் தலைப்பு 248 இன் கீழ் ரூபா 26,897,295 வரவு மீதியும் காட்டப்பட்டிருந்தது. இம் மீதி கட்டுநிதிக் கணக்கு தொடர்பான ACA-3 படிவத்திலும் காட்டப்படாதிருந்ததுடன் இது சம்பந்தமான விளக்கமளித்தல்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. | சரியான தரவுகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் | CIGAS கணனி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக மீதிகளைப் பரீட்சிக்கும் போது ஒழுங்குபடுத்தப்பட்ட மீதிகள் எனவும் இவை CIGAS நிகழ்ச்சித்திட்டத்தை ஆண்டின் இறுதியில் முடிவுறுத்தும் போது (year end) கட்டுநிதியை தீர்த்து வைத்தல் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகளின் பெறுமதிகளை உள்ளடக்கும் போது தெரிந்து கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் (year end) இப் பெறுமதிகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 3 விடயங்கள் தொடர்பாக திணைக்களத்தின் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியில் குறிப்பிட்ட பெறுமதிக்கும் திறைசேரியின் ஒருங்கிணைந்த பரீட்சை மீதியில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்குமிடையே ரூபா 115,898,788,636 கூட்டு மொத்தமான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | திணைக்கள ஏடுகளை திறைசேரியின் ஏடுகளுடன் இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | இப் பந்தியை தெளிவுபடுத்தி விரைவாக பதிலை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளேன். |

**1.6.6 ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழே தரப்படும் ஏடுகள் முறைப்படியாகவும் நாளது வரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | **சேதங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 110 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேட்டினை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | **வாகன சம்பவக் குறிப்பு புத்தகம்** | | |
| | நிதிப் பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்கள் நாளது வரையாக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் சம்பவக் குறிப்பு புத்தகத்தை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். | இது தொடர்பாக முறையாக நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**1.6.7 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களம் நிதிக்கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்து பேணுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்துதல் வேண்டும். அவ்வாறே அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை வினைத்திறனாகப் பேணுவதற்கு தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்ததுடன் அம்மீளாய்வினை எழுத்துமூலம் செய்து அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். எனினும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பர்டுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தலின் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக தற்பொழுது போதியளவு செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் வினைத்திறனாக அச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கிறேன். நிலைபேறான குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கான நிருவாக அறிக்கைக்குத் தேவையான செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவைப்படும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில்கள் வழங்குதல் இடம்பெறுகின்றது என்பது கணக்கீட்டு உத்தியோகத்தரால் சான்றுபடுத்தப்பட வேண்டிய | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்கயர்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அதிக அளவான பிராந்திய அலுவலகங்கள் காணப்படுவதனால் எதாவது தாமதங்கள் ஏற்பட்டிருந்த போதிலும் எதிர்காலத்தில் அச் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கிறேன். |

போதிலும் அறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்கள் வழங்குவதில் தாமதமும் பதில்கள் வழங்காமையும் இடம்பெற்றுள்ளது.

### 1.6.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி 104(3) மற்றும் 104(4) | நட்டங்கள் சேதங்கள் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களுக்கு மேற்பட்ட தாமதம் இடம்பெறுமா இருந்தால் நிதிப் பிரமாணம் 104(3) இன் பிரகாரம் தொடக்க அறிக்கையும் நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் சேதங்கள் ஏற்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,042,956 தொகையான நட்டங்கள் சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாத 05 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் 104(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக் கவில்லை. |
| (ஆ) | 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் வருமாக் குறியீட்டிற்கான மாதாந்த அறிக்கையானது அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் அரசாங்க நிதிக்கொள்கை பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியபோதிலும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அரசாங்க நிதிக்கொள்கை சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இதனை எதிர்காலத்தில் சரியாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2017 யூலை 25 ஆந் திகதிய 2/2017 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றிக்கையின் 4 ஆம் பந்தி | திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளின் பூர்த்தியையும் விளைவுகளையும் தெளிவாக இனங்காணக்கூடிய வகையில் பிரதான செயலாற்றல் குறிகாட்டி (KPI) வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை . | 2017 யூலை 25 ஆந் திகதிய 2/2017 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல். | 2020 ஆம் ஆண்டிலிருந்து செயலாற்றல் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சுற்றுலாச் சேவையின் கீழ் ‘‘சுற்றுலா படகு செயற்பாடுகள்’’ சேவைகளுக்காக சுற்றுலா அப்விருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவுசெய்யப்படாத தனிப்பட்ட கம்பனியின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 8 படகுகளுக்காக ர.பி 11 மதுவரி அதிகாரப்பத்திரத்தினை (உணவுச் சாலை அதிகாரப்பத்திரம்) வழங்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதற்கிணங்க 5 படகுகள் வரையறுத்த வியாபார மற்றும் கடல்சார் கம்பனியில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. பதிவு செய்தல் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்ட படகுகளில் இரண்டு படகுகளின் காலம் 2019 பெப்ரவரி 11 ஆந் திகதியும் 2019 மே 02 ஆந் | மதுவரி கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய சட்ட விதிகளை உருவாக்கிக்கொள் வதற்கு நடவடிக்கை எடுத்தல் | 2019 மார்ச் 23 மற்றும் 24 ஆகிய இரண்டு நாட்கள் மாத்தறை வெலிகம நகர மண்டபத்தில் நடைபெற்ற என்டபிரைஸ் இலங்கை நிகழ்ச்சித்திட்டத்தின் போது கௌரவ நிதி அமைச்சரினால் வழங்கிய பணிப்புரையின் பிரகாரம் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனைக்கு இணங்க மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 28(அ) பிரிவின் மூலம் கௌரவ நிதி அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் சுற்றுலா மேம்பாட்டினை முன்னிட்டு சேவ் லங்கா சாடர் (தனியார்) கம்பனியின் பெயரில் பதிவு செய்துள்ள 08 பயணிகள் படகுகளுக்காக புதிய உத்தரவுப்பத்திரமாக ர.பி 11 உணவுச்சாலை உத்தரவுப் பத்திரங்களை வழங்குமாறு அங்கீகரித்த கடிதம் பிரதேச செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | திகதியும் முடிவடைந்திருந்தது. வரையறுத்த வியாபார மற்றும் கடல்சார் கம்பனியின் கீழ் வியாபார கடல்சார் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக இப் படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. சுற்றுலா படகுச் செயற்பாட்டிற்காக மதுவரி உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்கு உரிய மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட விதிகளை உருவாக்குவதும் திணைக்களங்களால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1979 ஒக்தோபர் 12 ஆந் திகதிய 58 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிட்ட விசேட நிபந்தனையின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க அதிபர் நிர்ணயித்த கேள்விப் பணத்தை செலுத்துவதற்கு கேள்விதாரரை இணக்கம் செய்ய வைக்க முடியாத சந்தர்ப்பங்களில் புதிதாக கேள்வி ஆவணங்களைக் கோருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் இரத்தினபுரி இலக்கம் 01 கள்ளுத்தவறணை சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இரத்தினபுரி இலக்கம் 01 கள்ளுத்தவறணையை ஏலத்தில் விடும் போது ரூபா 46,089,120 மதிப்பீட்டுப் பெறுமதியில் 50 | உரிய சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | இது சம்பந்தமாக மீண்டும் கேள்வி கோரியிருந்தும் இத்துறையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மாத்திரம் விலை மனுக்களை சமர்ப்பித்திருந்ததுடன் ஏனைய கேள்விகளின் போது இவ்வாறு திறந்த நபர்கள் முன்வரவில்லை என இதற்கு முன்னருள்ள முன் அனுபவங்களின் பிரகாரம் தோன்றியுள்ளதனாலும் மீண்டும் கேள்விகளைக் கோருவதன் மூலம் அரசாங்கத்திற்கு கிடைக்கவுள்ள பணம் மேலும் தாமதிப்பதனாலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

சதவீதத்தினை விடக் குறைந்த பெறுமதியுடன் ரூபா 16,500,000 தொகை மற்றும் ரூபா 21,600,000 தொகைகளான இரண்டு கேள்விகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. இதன்போது மீண்டும் கேள்விகள் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 21,600,000 தொகைக்கு வேண்டிக்கொண்டிருந்த கேள்விதாரரின் வேண்டுதல் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு திணைக்களத்தினால் கடந்த 03 ஆண்டுகளில் கேள்விகள் வழங்கப்பட்ட பணத்தின் சராசரிப் பெறுமதி கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு கேள்விப்பெறுமதியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அச்சந்தர்ப்பங்களிலும் மதிப்பீட்டாளர் கேள்விப் பணத்தை மீண்டும் நிராகரித்து மேன்முறையீடு செய்திருந்தார். அதற்கிணங்க இருநபர் குழுவினால் அந்த மேன்முறையீட்டினைக் கருத்தில் கொண்டு கடந்த 03 ஆண்டுகளின் மதிப்பீடுகளின் சராசரிப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு ரூபா 28,000,000 பணத்திற்குப் போட்டிக் கேள்வி முறைமைக்குப் புறம்பாக கேள்வியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தலானது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

## 1.6.10 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மதுவரி அறிவித்தல் 902 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் வர்த்தக கடைத் தொகுதிக்காக வழங்கப்படுகின்ற ர.பீ 4 உத்தரவுப் பத்திரம் சம்பந்தமாக தமது தாய்க் கம்பனியின் கடந்த ஆண்டிற்கான வருடாந்த புரள்வு ரூபா 72 மில்லியனை மிகைத்துள்ளது என்பதற்கான ஒரு அறிக்கையினை ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வுக் கம்பனி சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், ஒரு தனியார் வர்த்தகக் கம்பனியின் செயலாளரால் 7 கிளைகள் தொடர்பாக மாதாந்த புரள்வினைக் காட்டுகின்ற ஒரு கடிதம் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | மதுவரி அறிவித்தல் 902 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | இது சம்பந்தமாக உரிய கம்பனியிடமிருந்து தகவல்கள் கோரப்பட்டிருந்ததுடன் பதில்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட உடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மதுவரி அறிவித்தல் 902 இன் 13(ஊ) பந்தியின் பிரகாரம் பாடசாலைகள் மற்றும் பிரசித்தி பெற்ற மத ஸ்தானங்களுக்கு இருக்க வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட தூரத்தின் அளவு மீறப்பட்டுள்ளது என முறைப்பாடு கிடைக்கையில் அரசாங்க நில அளவையாளரின் அறிக்கையினைப் பெற்று உள்ளபடியான தூரம் நிர்ணயிக்கப்பட வேண்டிய போதிலும், வெலிகமம், திருகோணமலை ஆகிய வர்த்தக கடைத் தொகுதிகளுக்காக முறைப்பாடுகள் | மதுவரி அறிவித்தல் 902 இன் 13(ஊ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | காகில்ஸ் புட்சிட்டி வெலிகம நிலையம் மற்றும் திருகோணமலை சம்பந்தமாக அரசாங்க நில அளவையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நில அளவை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு வெலிகம மற்றும் திருகோணமலை பிரதேச செயலகங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்க நில அளவையாளரின் அறிக்கையின் பிரகாரம் தேவைப்படுமாக இருந்தால் உத்தரவுப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்திருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2019 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு 02 கம்பனிகளால் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் வழங்கப்பட்ட கட்டளைகளில் குறிப்பிடப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட ஸ்பிரிட் இருப்பினை மிகைத்து 3,760,319.53 லீற்றர் இருப்புக்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. 3 கம்பனிகள் தொடர்பாக சுங்கத் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரமான அளவுகளுக்குமிடையே 4,553,811.7 லீற்றர் இருப்புக்களான குறிப்பிடத்தக்க அளவு வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. அவ்வாறு வித்தியாசம் காணப்பட்டதன் காரணமாக ஸ்பிரிட் இறக்குமதி செய்யும் போது இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், மதுவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களத்தால் முறையான ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப்பட்டதா என்பது தொடர்பாக சிக்கல் காணப்பட்டது. | ஈதயில் ஸ்பிரிட்டை இறக்குமதி செய்யும் போது நேரடி மேற்பார்வைக்கு உட்படுத்துவதும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களத்துடன் உள்ளக ஒருங்கிணைப் பினைப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுத்தல். | கட்டளையிடுகின்ற சந்தர்ப்பத்தில் அங்கீகரித்த ஸ்பிரீட் அளவினை விட சில சந்தர்ப்பங்களில் குதங்களில் மிகையாக சில அளவுகள் காணப்பட்டது என்பது சரியாகும். அதற்கு காரணமானது எடுத்துச் செல்லும் போது ஏற்படுகின்ற சேதங்களுக்காக உரிய வெளிநாட்டு நிறுவனம் மிகையான அளவினை பொதிகளில் உள்ளடக்கியிருப்பதும் இறக்குமதி செய்கின்ற மற்றும் ஏற்றுமதி செய்கின்ற நாடுகளுக்கிடையில் காணப்படுகின்ற வெப்ப மாற்றங்கள் என்பதுவும் அவதானிக்கப்பட்டது. ஸ்பிரீட் உற்பத்திச் சாலைகளுக்கு எடுத்துச் சென்றதன் பின்னர் உற்பத்திச் சாலைகளில் பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்பட்டு இறக்குமதி செய்யும் போது மேலதிகமாகக் கிடைத்துள்ள ஸ்பிரிட் அளவுகள் மற்றும் அதற்காக அறவிடப்பட்ட பணம் தொடர்பாக சுங்கத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்படும். |
| (ஈ) | ஒரு ஆண்டிற்குத் தேவையான ஈதயில் மதுபானங்களின் அளவு தொடர்பாக திணைக்களத்தினால் உறுதியான இனங்காணல்கள் இடம்பெற்றிருக்காததுடன் மிகையான இறக்குமதி சம்பந்தமாக தண்டப்பணத்தை விதிப்பதற்கு தேவையான சட்ட விதிகளை | தேவையான சட்ட விதிகளைத் தயாரித்தல். | தண்டப்பணத்தை அறவீடு செய்வதற்காக சட்டரீதியான ஏற்பாடு வழங்கப்பட்டிருக்கவில்லை என தயவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். இறக்குமதி செய்த இருப்புக்கள் மற்றும் உற்பத்திக்கு ஈடுபடுத்திய இருப்புக்கள் தொடர்பாக அனைத்து உற்பத்தி சாலைக்கும் பொறுப்பானவர்கள் இறக்குமதி செய்வதற்குத் |

| | | |
|---|---|---|
| உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க விண்ணப்பித்த அளவிற்கு மிகையாக இறக்குமதி செய்வதற்கு வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | | தேவையான ஸ்பிரீட் அளவினை சிபார்சு செய்து சமர்ப்பிப்பார்கள். ஸ்பிரீட் இறக்குமதி சம்பந்தமான அனைத்து தகவல்களையும் கணனி மயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான தொடக்க மதிப்பீட்டு வருமானம் ரூபா 135,000 மில்லியனாக இருந்ததுடன் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 115,417 மில்லியனாகும். அது மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 85 சதவீதமாகும். | நிதிப்பிரமாணம் 128(1)(அ) இன் பிரகாரம் மதிப்பீட்டினை நடைமுறைச் சாத்தியமாகத் தயாரித்தல். | இந்த ஆண்டிற்கான மதுவரி வருமானத்தை உற்பத்தியின் அடிப்படையில் பார்க்கையில் கடந்த ஆண்டுடன் அதாவது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அண்ணளவாக 5 சதவீதம் அளவான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. எனினும், காசு அடிப்படையில் மதுவரி வருமானத்தை கவனத்திற்கு எடுத்துக் கொள்கையில் 1 சதவீத முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) 2015 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை சேரகிக்கப்பட்ட மதுவரி வருமானம் தொடர்பான விபரம் பின்வருமாறாகும். அதற்கிணங்க 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டிற்கான வருமானத்தில் குறிப்பிடத்தக்க அளவு குறைவு அவதானிக்கப்பட்டது.<br><br>ஆண்டு \| மதுவரி வருமானம் \| சதவீத வித்தியாசம் | நிதிப்பிரமாணம் 128(2) இன் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக சரியான வருமான மதிப்பீட்டினைத் தயாரித்தல் மற்றும் 2015 யூலை 22 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக்கொள்கை சுற்றறிக்கையில் குறிப்பிட்ட ஒழுங்கு | இவ்வாண்டிற்கான மதுவரி வருமானத்தை உற்பத்தி அடிப்படையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்கையில் கடந்த ஆண்டுடன் அதாவது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அண்ணளவாக 5 சதவீதம் அளவிலான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. எனினும், காசு அடிப்படையில் மதுவரி வருமானத்தை கவனத்தில் கொள்கையில் 1 சதவீத முன்னேற்றம் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன்<br>2015 105.2 52.2<br>2016 120.2 14.2<br>2017 113.2 (5.8)<br>2018 113.8 0.5<br>2019 115.3 1.3 | விதிகளைப் பின்பற்றி வருமான நிருவாகத்தை செயற்திறனாக நிறைவேற்றுதல். | அவதானிக்கப்பட்டது. |
| (இ) | மதுவரி அறிவித்தல் இலக்கம் 902 இன் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வரிப்பணத்தை செலுத்தாத போது மிகைக் கட்டணமிடப்படுவதுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாத 9 கம்பனிகளிடமிருந்து ரூபா 39,514 தொகையான மிகைக்கட்டணம் அறவிடப்படாததுடன் மிகைக் கட்டண பணத்தை நிர்ணயிக்கப்பட்டவாறு கணிப்பிடப்படாமையின் காரணமாக 4 கம்பனிகளுக்குரிய ரூபா 42,643, மிகைக் கட்டண பணம் இழக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | விரைவாக பதிலை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றேன். |
| (ஈ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 கம்பனிகளிடமிருந்து 05 ஆண்டுகளை மிகைத்திருந்த நிலுவையான வரிப் பணங்களின் மொத்த தொகை ரூபா 479.99 மில்லியனாக இருந்ததுடன் தாமதக் கட்டணங்களின் மொத்த தொகை ரூபா 1,896.39 மில்லியனாகும். 2 கம்பனிகள் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் 3 கம்பனிகள் சம்பந்தமாக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்திருந்தும் செயல் முன்னேற்றம் அவதானிக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | விரைவாக பதிலை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நிலுவை வருமானங்களைச் சேகரிப்பது சம்பந்தமாக நி.பி 176(2),3 இன் பிரகாரம் வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | பதில்கள் வழங்கப்படவில்லை. |
| (ஊ) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ACA-1(1) படிவத்திற்கு இணங்க மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வருமான மீதி ரூபா 3,799,189,371 ஆக இருந்ததுடன் நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மீதி ரூபா 3,319,192,027 ஆக இருந்ததனால் ரூபா 479,997,344 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நிலுவை வருமானம் தொடர்பாக திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமையை அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ACA-1(1) படிவத்திற்காக நிலுவையான வருமான மீதியை வழங்கும் போது 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட காசு அடிப்படையில் தயாரிக்கப்பட்டதுடன் வருமான அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் நிதி அமைச்சுக்கு வழங்கும் போது அந்த வழங்கிய திகதி வரை கடந்த ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி கிடைத்த நிலுவை வரிப் பணத்தை கழித்ததன் பின்னர் மீதி பெற்றுக் கொள்ளப்பட்டது. அதன் காரணமாக இவ்வாறு வித்தியாசம் ஏற்பட்டுள்ளது என அறிவிக்கின்றேன். |
| (எ) | புகையிலை வரி அதிகாரச்சட்டத்திற்கு இணங்க வரி அறவிடப்படாமை<br>------------------------------------------------ | | |
| (i) | 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து சுருட்டுக்கள், பீடிகள் மற்றும் அனைத்து குழாய் புகையிலை ஒரு கிலோ கிராமிற்காக வரி விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய போதிலும், உற்பத்தி செய்யப்படுகின்ற சுருட்டு மற்றும் பீடி சம்பந்தமாக | 1999 இன் 08 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளுக்காக வரியை அறவீடு செய்தலானது நடைமுறையில் சிக்கலுடையதாக இருப்பதனால் அதற்கான மாற்று நடைமுறையாக பீடி மற்றும் சுருட்டு உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற புகையிலை மூலப்பொருள் அளவின் அடிப்படையில் வரியை அறவிடும் நடைமுறையானது உத்தேச |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவ்வாறான வரி அறவிடப்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டளவில் பீடி மற்றும் சுருட்டு உற்பத்திக்காக 500 பீடி மற்றும் சுருட்டு உற்பத்தியாளர்களுக்கு அண்மித்த அளவானவர்கள் திணைக்களத்தில் பதிவு செய்து கொண்டிருந்தனர். கடந்த 4 ஆண்டு காலத்தில் அக்கைத்தொழிலின் பீடி மற்றும் சுருட்டு உற்பத்தியானது அண்ணளவாக 16 பில்லியன் அளவிலானதாகும். கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட 30 நிறுவனங்களின் 2018/2019 வருடத்திற்கான பீடி உற்பத்தி 31,348,500 அலகுகளாக இருந்ததுடன் பதிவு செய்யப்பட்ட 518 நிறுவனங்களை கவனத்திற்கு எடுத்துக் கொள்கையில் வருடாந்தம் அதிக அளவிலான வரி வருமானத்தை அரசாங்கம் இழந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | | புகையிலை வரி (சராசரி) கட்டளைகளின் திருத்தத்தின் போது உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்திருத்திய அறிவித்தலானது தற்பொழுது சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது காணப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் இறக்குமதி செய்யப்படுகின்ற சிகரட், சுருட்டு மற்றும் பீடி அலகுகளுக்காக (stick) வரி அறவிடப்படுகின்றது. |
| (ii) | சிகரட் பயன்பாட்டிற்காக மாத்திரம் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்துதல் மேற்கொள்ளப்படுவதாகவும் பீடி பயன்பாடு சம்பந்தமாக அவ்வாறான ஒழுங்குபடுத்தல் செய்யப்படுவதில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. மேலும், பீடி பயன்பாட்டின் மூலம் உறிஞ்சப்படுகின்ற புகை உடம்பிற்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் | புகையிலை வரி அதிகாரச் சட்டத்திற்கு உட்பட்டு நடவடிக்கை எடுத்தல். | பீடி மற்றும் சுருட்டு உற்பத்தியை குடிசைக் கைத்தொழிலாக விசாலமாக பரவியுள்ளதனால் இவற்றின் உற்பத்தி மற்றும் களஞ்சியப்படுத்தல் நடவடிக்கையானது மதுபானக் கைத்தொழிலைப் போல நேரடிக் கண்காணிப்பிற்கு உட்படுத்துவது நடைமுறையில் சிக்கலான நிலையில் காணப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | தீவிரமான வியாதிகளுக்கு அது காரணமாக இருப்பதாகவும் இனங்காணப்பட்டது. மேலும், வேலைப் படையின் வினைத்திறன் அதிக அளவில் இழக்கப்படுவதற்கு இது தாக்கமளிக்கின்றது எனவும் இனங்காணப்பட்டது. அதன் காரணமாக பீடி உற்பத்தியினை ஒழுங்குபடுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்தும் தேவைப்பாடு காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஏ) | வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட மற்றும் சேவையை வறிதாக்கிய 09 உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 683,925 கடன் மீதி 05 ஆண்டுகளை மிகைத்திருந்ததுடன அவற்றில் 04 உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 183,305 மீதியானது 4 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகக் காணப்பட்டு வருகின்ற மீதியாகும். | தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சேவையை வறிதாக்கிய உத்தியோகத்தர்கள் மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. |

## 2.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 7 செலவு விடயங்களுக்காக ரூபா 507.2 மில்லியன் கூட்டு மொத்தமான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் ரூபா | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக செலவு மதிப்பீட்டினைத் தயாரித்தல். | கடந்த ஆண்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் காரணமாக எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்வதற்கு முடியாமையின் காரணமாக சில செலவு |

| | | | |
|---|---|---|---|
| | 124.8 மில்லியன் கூட்டுமொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அச்செலவு விடயங்களின் சேமிப்பானது வழங்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் 18 சதவீதத்திலிருந்து 84 சதவீதம் வரையான வீச்சுடைய அளவில் காணப்பட்டது. | | விடயங்களுக்கான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 58.45 மில்லியன் மொத்த தேறிய நிதிஏற்பாடானது பயன்படுத்தப்படாது முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியாக செலவு மதிப்பீட்டினைத் தயாரித்தல். | நிதிக் குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைக் கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருக்காததனால் மேற்கூறிய நிதிஏற்பாடு பயன்படுத்தப்படவில்லை. எனினும், 2019 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டுக் குத்தகை முறைமையின் கீழ் வாகனங்களைக் கொள்வனவு செய்தல் இடம்பெற்றதுடன் அது 1406 மற்றும் 2108 ஆம் செலவு விடயங்களின் மூலம் கொடுப்பனவு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. மென்பொருள் அபிவிருத்தி செயற்திட்டம் தற்பொழுது இடம்பெற்று வருவதுடன் கொடுப்பனவு செய்வதற்காக நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 11 மீண்டுவரும் செலவு விடயங்கள் தொடர்பாக 27 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வழங்கல்கள் மற்றும் சேவைகளின் ரூபா | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் | தவறுதலாக இவ்வாறானவை இடம்பெற்றுள்ளதுடன் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| | 3,430,288 கூட்டுமொத்த தொகையும் 4 மூலதன செலவு விடயங்கள் தொடர்பான 4 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள சேவைகளின் ரூபா 1,468,150 கூட்டுமொத்த தொகையும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | பிரகாரம் பொறுப்புக்களை மேற்கொள்ளல். | |
| (ஆ) | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பு இலக்கம் (iii) இன் கீழ் அறிக்கையிடப்படாத கடப்பாடுகள் அல்லது பொறுப்புக்கள் முன்னைய ஆண்டின் செலவாக 2020 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்படாதிருத்தல் வேண்டும். எனினும், 2019 ஆம் ஆண்டின் போது அவ்வாறே அறிக்கையிடப்படாத 15 சந்தர்ப்பங்கள் தொடர்பான ரூபா 4,898,437 கூட்டுமொத்த தொகையானது 2020 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | நிதிப்பிரமாணம் 94(i) இன் பிரகாரம் வருடாந்த மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு இல்லாதிருக்கையில் செலவுகளுக்கு அல்லது பொறுப்புக்களுக்கு கடப்பாடு செய்யலாகாது என காட்டப்பட்டிருந்தும் செலவு விடய இலக்கம் 1406 இற்காக நிதிஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 43,903 மாத்திரம் இருந்தும் ரூபா 1,847,321 இற்காக பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 94(i) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | செலவு விடயம் 1406 இற்குத் தேவையான நிதி ஏற்பாட்டினை மாற்றிக் கொண்டதன் பின்னர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. |

**2.4 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 5 ஒப்பந்த நிறுத்தி வைத்தல்களின் ரூபா 9,946,304 மொத்த தொகை மற்றும் காலங்கடந்த 5 கேள்வி வைப்புக்களின் ரூபா 71,000 மொத்த தொகை சம்பந்தமாக நி.பி 571 இன் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | கேள்வி வைப்புக்கள் சம்பந்தமாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்வேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| அரசாங்க வருமானத்தை அதிகரிப்பதற்காக மதுபானப் போத்தல்கள் மற்றும் மதுபானப் போத்தல் சார்ந்த உற்பத்திகளுக்காக பாதுகாப்பு ஸ்டிக்கர்களை வழங்குதல் மற்றும் பாதுகாப்பு ஸ்டிகர் முகாமைத்துவ முறைமையை வழங்குதல் மற்றும் ஸ்தாபித்து பராமரிப்பதற்காக 2019 ஆம் ஆண்டிற்காக ரூபா 257,000,000 நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2020 ஆம் ஆண்டு வரையும் அச்செயற்திட்டத்தை தேசிய உற்பத்திக்காக பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | லயன் பிரேவரி கம்பனி மற்றும் DCSL கம்பனியால் ஸ்டிக்கர்களை ஒட்ட வைக்கும் உபகரணத்தை புதிதாக உருவாக்கி ஸ்டிக்கர்களை ஒட்டுவதற்காக போதிய காலத்தை வழங்குமாறு விடுவிக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் உள்நாட்டு மதுபானங்களின் மீது ஸடிக்கர்களை ஒட்டுவதனை ஆரம்பிக்கும் திகதி இரண்டு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது. கொரோனா தொற்றுநோய் நிலைமையைப் போல மதுபான உற்பத்திக் கம்பனிகள் ஸ்டிக்கர்களை ஒட்டும் உபகரணங்களை பொருத்தி இருக்காததனால் மீண்டும் ஸ்டிக்கர்களை ஒட்டும் திகதியை 2020 திசெம்பர் 31 வரை |

| | | |
|---|---|---|
| | | நீடிப்பதற்காக 03/2020 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. இதன் நடைமுறை மற்றும் தொழில்நுட்ப விடயத்தின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டில் உள்நாட்டு மதுபானங்களின் மீது ஸ்டிக்கர்களை ஒட்டுவதனை ஆரம்பிக்க முடியாதிருந்தது என தெரிவித்துக் கொள்கின்றேன். |

**3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 210,830,625 தொகையான 05 செயற்திட்டங்களின் நிதிச் செயலாற்றல் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 307,110,968 ஆக இருந்ததுடன் உரிய 05 செயற்திட்டங்களுக்குமான பௌதீக செயலாற்றலானது திட்டமிட்டவாறு திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | கண்டி, அம்பாறை, பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவு நிர்மாணங்களின் தாமதங்கள் தொடர்பாக கட்டிட திணைக்களத்திடமிருந்து எழுத்து மூலம் விடயங்களை விசாரிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.<br><br>பூகொடை கட்டிடத்தின் தொடக்க மதிப்பீட்டின் பிரகாரம் செய்யப்பட வேண்டிய அனைத்து வேலைகளும் தற்பொழுது முடிவடைந்துள்ளதுடன் சில மேலதிக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ள போதிலும், தற்பொழுது உரிய செலவு விடயத்தின் நிதி ஏற்பாடு முடிவடைந்துள்ளதனால் எதிர்காலத்தில் புதிய பாதீட்டு நிதிஏற்பாடு கிடைத்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. |

**3.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட சில பந்திகள் சம்பந்தமாக இணக்கமின்மைகளும் பிழைகளும் காணப்பட்ட 03 சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | பிரிவுகளுக்கிடையே தொடர்புகளைப் பேணி சரியான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | அட்டவணை 8.15 மற்றும் அட்டவணை 8.16 சுட்டிக்காட்டியுள்ள பிழைகளை ஏற்றுக்கொள்கின்றேன். |

**3.4 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) வரியினைக் கணிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ரூபா 745,000 பெறுமதியான கணனி நிகழ்ச்சித் திட்டத்தினை கொள்வனவு செய்தல் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் விடயம் சம்பந்தமான தொழில்நுட்ப அறிவினைக் கொண்ட ஒரு நபர் தொடர்புபட்டிருக்காததுடன் மென்பொருள் முறைமையினைப் பேணுகின்ற கிரயம், பராமரித்தல் கிரயம், தொடக்க செலவு, சேவைக்கு முன்னைய வழங்கல்கள் முதலியவை தொடர்பாக கவனம் செலுத்தாது | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது அதிக விலைகளைச் சமர்ப்பித்த நிறுவனத்தினால் பொறுப்பேற்றல் காலம் தொடர்பாக காட்டப்பட்டிருக்காததுடன் ஏனைய இரண்டு நிறுவனங்களில் அதிக பொறுப்பேற்றல் காலத்தை வழங்கியிருந்ததானது குறைந்த விலையைச் சமர்ப்பித்த நிறுவனத்தினால் என்பதனால் அந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களுக்கு மத்தியில் ஆகக் குறைந்த விலையினைச் சமர்ப்பித்திருந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ii) | கணனி மென்பொருளில் தரவுகளை உள்ளடக்கியதன் பின்னர் மென்பொருளின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்ற முடியுமா என்பதனைப் பரீட்சிப்பதற்காக ஒரு அரசாங்க நிறுவனத்தின் அல்லது ஒரு அரச சார்புடைய நிறுவனத்தின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒரு அரசாங்க நிறுவனத்தின் அல்லது ஒரு அரச சார்புடைய நிறுவனத்தின் ஆலோசகரின் உதவியைப் பெற்றுக்கொள்ளல். | இம்மென் பொருளினைத் தயாரிக்கும் போது கணனி தொழில்நுட்பம் தொடர்பாக அரச சார்புள்ள நிறுவனமாகிய தேசிய தொழில் முயற்சி முகாமைத்துவ நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப விரிவுரையாளர் / ஆலோசகரின் சேவையும் மதுவரி சம்பந்தமான தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு பிரதி மதுவரி ஆணையாளரின் சேவையும் கணக்கீட்டு உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக கணக்காளரின் உதவியும் பெற்றுக்கொள்ளப்பட்டது எனக் குறிப்பிடுகின்றேன். |
| (iii) | பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பெறுகைக்கு முன்னையதான கிரயம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் கணனி மென்பொருளைப் பேணுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான ஒரு உடன்படிக்கையானது 2020 சனவரி 20 ஆகிய கணக்காய்வுத் திகதி வரையும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கணனி மென்பொருட்களை பேணுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான சேவை உடன்படிக்கை மேற்கொள்ளப் படுதல் வேண்டும். | இம்மென்பொருளை தற்பொழுது பேணுகின்ற நிறுவக கட்டமைப்புக்குள் பயன்படுத்துவதற்கு முடியமான வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதனால் மேலதிக செலவு செய்ய வேண்டி ஏற்படாததுடன் உரிய நிறுவனத்தினால் வருடாந்த உத்தரவாத காலம் வழங்கப்பட்டுள்ளது. எனவே மேலதிக சேவை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை எனவும் அக்கால எல்லையின் இறுதியில் கணக்காய்வினால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட வகையில் சேவை உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு |

| | | | |
|---|---|---|---|
| | | | உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | அம்பாறை, பருத்தித்துறை, முல்லைத்தீவு, பூகொடை ஆகிய பிராந்திய அலுவலகங்களை நிர்மாணிப்பதற்கான கட்டிடத் திட்டங்களுக்காக உரிய உள்ளூராட்சி நிறுவனம் / நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பது அவதானிக்கப்படவில்லை. காணியின் உரிமை தொடர்பாக தீர்வு காணப்படாதும் கட்டிட திட்டத்திற்காக உள்ளூராட்சி நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாதும் உரிய நிர்மாண நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | நிர்மாணங்களுக் குரிய சட்டரீதியான உரிமையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தலும் அதிகாரிகளின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தலும், அதிகாரசபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தலும், | உள்ளூராட்சி அதிகார சபை / நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் உரிய ஆவணங்கள் அந்த பிராந்திய அலுவலகங்களில் உள்ளன. அந்த ஆவணங்களின் பிரதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து எதிர்காலத்தில் அந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 3 பிரிவுகளின், அலுவலக அறையில் இறாக்கைகளைப் பொருத்துவதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 2,112,500 ஆகும். அதற்காக விலை மனுக்களைக் கோருதல் 2018 திசெம்பர் 6 இலிருந்து 2019 யூன் 29 வரையான காலத்துள் 3 சந்தர்ப்பங்களின் போது இடம்பெற்றிருந்தது. ஒரே விடயத்திற்காக மீண்டும் மீண்டும் விலை மனுக்களைக் கோருவதன் மூலம் பெறுகைக் கிரயம் அதிகரித்தல் இடம்பெற்றுள்ளது எனவும் அது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.6 ஆம் பந்திக்கு முரணான செயற்பாடு எனவும் அவதானிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | திணைக்கள கடமைத் தேவைப்பாடு உருவாகின்ற சந்தர்ப்பத்துக்கு இணங்க வருமானப் பிரிவு, அனுமதிப்பத்திர பிரிவு, ஆவணக் காப்பகம் மற்றும் கணக்காளர் (வருமானம்), அலுவலக அறைகளில் அலுமாரி (இறாக்கை)களைப் பொருத்துதல் அடிக்கடி இடம்பெற்றிருந்தும் எதிர்காலத்தில் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 10 விடயங்களின் கூட்டு மொத்தமான ரூபா 4,861,556 பெறுமதி பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | பெறுகைத் திட்டத்தை நிர்ணயிக்கப் பட்டவாறு திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத விடயங்கள் பின்னர் உள்ளடக்கப்பட்டு பெறுகைத் திட்டம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. |

## 3.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 13 ஆம் இலக்க சீதுவ மூகலங்கொமுவ எனும் பெயருள்ள கள்ளுத்தவறணைக்கான உயர்ந்த கேள்விப் பெறுமதி ரூபா 4,375,000 ஆக இருந்தும் அக் கேள்வியானது இரண்டாம் கேள்விதாரருக்கு ரூபா 3,800,505 இற்கு வழங்குவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விடயம் என்ன என்பது தொடர்பான எழுத்துமூல சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் அதன் மூலம் அரசாங்கத்திற்கு ரூபா 574,495 நட்டம் ஏற்பட்டுள்ளது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | ஏற்படக்கூடிய நட்டத்தை குறைக்கும் வகையில் நடடிவடிக்கை இடம்பெறுதல் வேண்டும். | இக்கள்ளுத் தவறணைக்கு கேள்வி கோரும் போது உயர்ந்த கேள்வியாக ரூபா 4,375,000 சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் அக்கேள்விதாரரின் கேள்விப் பத்திரமானது பிணை வைப்புச் செய்தல் குறைபாட்டின் காரணமாக கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்பட்டது. அதற்கிணங்க இரண்டாவது விண்ணப்பதாரருக்கு கேள்வி வழங்கப்பட்டது. கேள்விச் சபையின் தலைவர் பதவியினை வகித்தவர் உரிய பிரதேசத்திலுள்ள பிரதேச செயலாளராகும். அவர் மற்றும் கேள்விச் சபை அனைத்து விடயங்களையும் கருத்திற் கொண்டு தீர்மானம் எடுத்துள்ளது என தயவாகத் தெரிவிக்கிறேன். |
| (ஆ) | சமமான அதிகாரப் பத்திரதாரர்களாகச் செயற்பட்ட இரண்டு நபர்களால் ரி.பி 4 உத்தரவுப் பத்திரம் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையும் | மதுவரி அறிவித்தல் இலக்கம் 983 இன் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் | 926 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் மற்றும் 2010 நவம்பர் 19 ஆந் திகதிய 1680/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் இப் பணம் ரூபா 1,500,000 |

| | | | |
|---|---|---|---|
| | புதுப்பிக்கப்பட்டிருந்ததுடன் சத்தியக் கடதாசியின் மூலம் 2018 ஆம் ஆண்டிலிருந்து ஒரு நபருக்கு உத்தரவுப் பத்திரம் வழங்கப்பட்டது. எனினும் 2015 திசெம்பர் 15 ஆம் திகதிய 983 ஆம் இலக்க மது வரி அறிவித்தலின் பிரகாரம் அனுமதிப்பத்தரத்தை ஒப்படைக்கும் கட்டணமாகிய ரூபா 15,000,000 பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 200,000 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. மதுவரி அறிவித்தல் இலக்கம் 926 இன் பிரகாரம் ரூபா 1,300,000 பணம் அறவிடப்பட்டுள்ளது என இதற்காக வழங்கப்பட்ட கணக்காய்விற்காக அனுப்பட்ட பதிலில் குறிப்பிடப்பட்டது. அதற்கிணங்க மேலும் அறவிடப்பட வேண்டிய பணம் ரூபா 13,500,000 ஆகும். | | வரை திருத்தப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கிணங்க செலுத்த வேண்டிய மிகுதி ரூபா 1,300,000 பணம் 2020 சனவரி 07 ஆந் திகதிய Z/24-0999384 ஆம் இலக்க பணத்தை பெறுப்பேற்கும் பற்றுச்சீட்டின் மூலம் செலுத்தப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (இ) | இரண்டு வாகன விபத்துக்கள் தொடர்பான பழுதுபார்த்தல் செலவு ரூபா 817,711 ஆனதுடன் அதற்கான காப்புறுதி இழப்பீடாக ரூபா 618,489 மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. மிகுதி ரூபா 199,222 பணம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நி.பி 106 மற்றும் நிதி.பி 113 இன் கீழே வரும் நட்டங்கள் மற்றும் கைதவிர்த்தல் தொடர்பான கூற்றில் மேலும் அறவீடு செய்ய வேண்டியவை அல்லது பதிவழிக்க வேண்டியவை அல்லது கைதவிர்க்க வேண்டியவையாக அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. | சரியான தரவுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 3.6 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில்கள் வழங்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2020 மார்ச் 12 ஆந் திகதி வரை 2019 கணக்காண்டிற்காக 27 கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அக் கணக்காய்வு ஐயவினாக்களில் 10 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில்கள் வழங்குவதற்கு 03 மாதங்களுக்கு மிகைத்த காலமும் 10 ஐயவினாக்களுக்கு பதில்கள் வழங்குவதற்கு 1 மாதத்திற்கும் 3 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலமும் எடுத்திருந்தது. 06 ஐய வினாக்களுக்கு 2020 யூன் 01 ஆந் திகதி வரையும் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பதில்களை அனுப்புவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுத்தல் | நாட்டில் காணப்பட்ட கொரொனா நிலைமையின் காரணமாக பிராந்திய அலுவகலங்களிலிருந்து தகவல்களைப் பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய பதில்களைச் சமப்பிப்பதற்கு சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். உரிய பதில்களை தாமதமின்றி அனுப்புமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ள துடன் எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமை ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுப்பேன். |

## 3.7 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மாகாண உதவி மதுவரி ஆணையாளர் மற்றும் மதுவரி அதிகாரிகளால் அவர்களின் மகாணத்தின் வியாபாரத்தை முன்னிட்டு வைக்கப்பட்டுள்ள கள்ளுப் போத்தல்களின் மாதிரியை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் பெற்றுக்கொண்டு இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி அறிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டிய | சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | ஏற்றுக்கொள்கிறேன். மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மாதிரியைப் பெற்று பரீட்சிக்க வேண்டுமென உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் இரத்தினபுரி இலக்கம் 1 மற்றும் இலக்கம் 2 ஆகிய கள்ளுத் தவறணைகளிலிருந்து 2017 ஒக்தோபர் மாத்தின் பின்னர் 2020 சனவரி 29 கணக்காய்வுத் திகதி வரை மாதிரிகளைப் பெற்று இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. | | |
| (ஆ) | கள்ளுத் தவறணைகளை மதிப்பீடு செய்யும் போது ஒவ்வொரு கட்டண அனுமதிப் பத்திரம் பெற்ற நிலையங்களிலிருந்து வருடாந்தம் அறிவிக்கப்பட்டுள்ள பயன்படுத்தல் தரவுகளுக்கும் மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள தரவுகளுக்குமிடையே குறிப்பிடத்தக்க அளவு வித்தியாசம் காணப்பட்டது. மதிப்பீட்டு ஆண்டிற்காக பயன்பாட்டு மதிப்பீட்டினை கணிப்பீடு செய்யும் போது கள்ளுத்தவறணைகளுக்கு கள்ளு வழங்குவதற்காக அங்கீகரித்த தென்னை மரங்களின் எண்ணிக்கை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்படாததனால் சரியான மதிப்பீட்டுப் பெறுமதியை கணிப்பீடு செய்தல் இடம்பெற்றுள்ளதா என்பது சிக்கலுடையதாகும். பதிலுக்குதரிய உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படவில்லை. | கள்ளுத் தவறணைகளை மதிப்பீடு செய்யும் போது சரியான தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் மதிப்பீட்டு பெறுமதியை கணிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | கள்ளு கட்டணங்களை மதிப்பீடு செய்யும் போது கடந்த ஆண்டின் ஆகஸ்ட் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து உரிய ஆண்டின் யூலை மாதம் 31 ஆந் திகதி வரையான காலம் ஒரு ஆண்டாக கணிப்பீடு செய்யப்படுகின்றது. எனவே அதில் குறிப்பிடப்பட்ட வித்தியாசம் இடம்பெற்றுள்ளபோதிலும் மதிப்பீடு செய்யும் போது பிழைகள் இடம்பெறவில்லை என தெரிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பீடி மற்றும் சுருட்டு உற்பத்திகளுக்குரிய அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த பின்னர் உற்பத்தியாளர்கள் மீண்டும் பதிவு செய்தலைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்களின் போது அந்த உற்பத்தி நிறுவனத்தினால் அனுமதிப் பத்திரமின்றி தொடர்ந்தும் அந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளதனால் அது தொடர்பாக திணைக்களத்தால் அந்த நிறுவனத்தினை பரிசீலனைக்கு உட்படுத்துதல் இடம்பெற வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படட 30 கோவைகளுக்கு மத்தியில் வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான பதிவு செய்தலை புதுப்பிக்காத நிறுவனங்கள் 05 ஆகும். | திணைக்களத்தினால் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப் படுதல் | இது தொடர்பாக உரிய மதுவரி நிலையங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந் நிறுவனங்களால் பதிவு செய்தல் சானறிதழ் இல்லாது உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றது என்பதற்கு எதுவித மதுவரி நிலையத்திடமிருந்தும் அல்லது பொது மக்களிடமிருந்தும் முறைப்பாடுகள் இன்று வரை அறிவிக்கப்பட்டிருக்க வில்லை. பீடி மற்றும் சுருட்டு உற்பத்தியானது குடிசைக் கைத்தொழிலாக ஆழமாகப் பரவியுள்ளதனால் அந்த இடங்களுக்கு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துதல் நடைமுறையில் சிக்கலான மட்டத்தில் காணப்பட்டது. |
| (ஈ) | அனுமதிப்பத்திர பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளான மதுபான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி மற்றும் ஸ்பிரிட் இறக்குமதிக்குரிய போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களையும் உத்தரவுப் பத்திரங்களையும் வழங்குதல் மற்றும் கைத்தொழில் உற்பத்திகளுக்காக ஸ்பிரீட் வழங்குதல் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது கணனி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் அவற்றினை | சேவை பெறுனர்களுக்கு செயற்திறனான சேவைகளை வழங்குவதற்குத் தேவையான வசதிகளைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வகையில் அனுமதிப்பத்திரம் பிரிவிற்குரிய கடமைகளை கணனிமயப்படுத்துவது தொடர்பான செயற்பாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தகவல்களையும் தரவுகளையும் பெறுக்கொள்ளும் போது தாமதங்கள் ஏற்படுகின்ற சிக்கல்கள் உருவாகியுள்ளன. | | |
| (உ) | அனுமதிப் பத்திரப் பிரிவானது திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற ஒரு பிரிவாக உள்ளதுடன் இப்பிரிவில் உள்ள செயற்பாடுகளை கணனி மென்பொருளினூடாக மேற்கொள்வதற்கு போதியளவு மனித வளங்களை வழங்குவதற்கும் உத்தியோகத்தர்களை வருடாந்தம் பிரிவுகளுக்கிடையே கடமை மாற்றம் செய்வதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பது அவதானிக்கப்பட்டது. திணைக்களத்தின் நிருவாக மற்றும் உள்ளகச் செயற்பாடுகளுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியளிக்கும் வகையில் அனுமதிப்பத்திரப் பிரிவை மறுசீரமைப்புச் செய்ய வேண்டுமென்பதும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | அனுமதிப் பத்திரப் பிரிவின் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மைகளை ஏற்படுத்தும் வகையில் கணனி மென்பொருட்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | கணக்காய்வின் ஆலோசனையின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்காலத்தில் முயற்சிகள் எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ள 10 வாகனங்கள் தொடர்பான கைதவிர்ப்பு நடவடிக்கைகள் 2020 யூன் வரை முடிவுறுத்தப்படவில்லை. இவ்வாகனங்கள் பிராந்திய அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் கைதவிர்ப்பு நடவடிக்கைகள் தாமதமடைவதன் காரணமாக பெற்றுக்கொள்ளக் கூடியதான பொருளாதார நலன்கள் கிடைக்காமல் போவதினூடாக நட்டம் ஏற்பட்டுவதற்குள்ள வாய்ப்பு கணக்காய்வின் போது மறுக்க முடியாத விடயமாகும். | 2015 யூலை 15 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல். | பதில்கள் வழங்கப்படவில்லை. |
| (எ) | மீளாய்வாண்டின் போது இடம்பெற்ற இரண்டு வாகன விபத்துக்களில் வெளித்தரப்பினர்களால் தவறுகள் செய்யப்பட்டிருந்ததுடன் அந்த விபத்துக்கள் சம்பந்தமான திருத்தம் செய்தல் செலவுகள் ரூபா 885,047 கூட்டுமொத்தமாகும். இச்செலவுகளை வெளிக் காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது திணைக்களத்தின் வாகனங்களை காப்புறுதி செய்துள்ள நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் காரணமாக எதிர்காலத்தில் காப்புறுதிகளை மேற்கொள்ளும் போது பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்த கழிவுகள் இழக்கப்படுவதன் அடிப்படையில் மேலும், | விபத்துக்கள் சம்பந்தமாக பொறுப்பான தரப்பினர் களிடமிருந்து இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | நீதிமன்ற நடைமுறையினால் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாகவும் கடமை தேவைப்பாட்டின் அடிப்படையில் திருத்தம் செய்து காப்புறுதி இழப்பீட்டின் மூலம் நட்டத்தை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தயவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | நட்டம் ஏற்படும் என்ற சந்தேகத்தை கணக்காய்வின் போது புறக்கணிப்புச் செய்ய முடியாதுள்ளது. | | |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது பயன்படுத்துவதிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட 28 தொலைபேசிகளுக்குரிய தொலைபேசிக் கட்டணமாக ரூபா 230,119 செலுத்தப்பட்டிருந்ததுடன் 2020 பெப்ரவரி 20 ஆன கணக்காய்வுத் திகதி வரை அத்தொலைபேசிகளுக்கான இணைப்புக்களை துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிக்கனத் தன்மையாகவும் விளைதிறனாகவும் வளங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஐ) | சீ.சீ.ரீ.வீ தரவு களஞ்சிய முறைமையில் தரவுகளைக் களஞ்சியப்படுத்துதல் உச்ச அளவாக ஒரு மாத காலம் வரை மாத்திரமாகும். கடந்த காலத்திற்கான காட்சிகளின் தரவுக் களஞ்சிய விபரத்தை களஞ்சியத்தில் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் மூலம் சீ.சீ.ரீ.வி முறைமையை கொள்வனவு செய்வதற்கும் பராமரித்து பேணுவதற்கும் மேற்கொள்ளப்பட்ட செலவிலிருந்து முறையான நலன்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதா என்பது கணக்காய்வில் சிக்கலுடையதாகும். | சிக்கனத் தன்மையாகவும் விளைதிறனாகவும் வளங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | |
|---|---|---|
| (ஓ) நிர்மாண நடவடிக்கைகள் தாமதித்ததன் காரணமாக அம்பாறை, பூகொடை, மற்றும் கண்டி மதுவரி அலுவலகங்கள் செயற்பட்டு வந்த கட்டிடங்களுக்காக மீளாய்வாண்டிற்கான வாடகையாக ரூபா 560,100 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவ்வாறான செலவுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | 2020 ஆம் ஆண்டளவில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களில் அலுவலகங்களை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் அடைந்து கொள்ளப்பட வேண்டிய குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்ளல் தொடர்பாக திணைக்களம் அறிந்து கொண்டிருக்காததுடன் அவை சம்பந்தமாக நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறிக்கோள்களை இனங்கண்டு அடைந்து கொள்வதற்கு தேவையான நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்து செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கும் நடைமுறைப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுத்தல். | 2020 ஆம் ஆண்டிலிருந்து உரிய முறைப்படி செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2019 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு சிரேஸ்ட மட்டத்திலுள்ள 20 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 16 பதவிகள் 05 | தேவைப்பாட்டினைக் கருத்தில் கொண்டு அங்கீகரித்த பதவியணியினரைச் சேர்த்துக் | சிரேஸ்ட மட்டத்திலுள்ள பதவியான மதுவரி அதிகாரி பதவி தொடர்பாக நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் 4 பதவிகள் 2 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் வெற்றிடமாகக் காணப்பட்டது. அவற்றில் 12 பதவிகளுக்காக பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. | கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 12 பதவிகளை வழங்குவதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் 642/2012 ஆம் இலக்க வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருவதன் காரணமாக அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு முடியாதுள்ளது. தற்பொழுது வழக்கு முடிவடைந்துள்ளதனால் 2020 யூன் 23 ஆந் திகதி நேர்முகப் பரீட்சையினை நடாத்தி நியமன நடவடிக்கைகளுக்காக அந்த ஆவணங்கள் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | திணைக்களத்தின் செயற்பணிக்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகின்ற சிரேஷ்ட மற்றும் மூன்றாம் மட்டங்களிலுள்ள 77 சிரேஷ்ட பதவிகள் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டகளிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டமை திணைக்களத்தின் எதிர்கால செயலாற்றலுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | தேவைப்பாட்டினைக் கவனத்தில் கொண்டு அங்கீகரித்த பதவியணியினரைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | மூன்றாம் மட்ட பதவிகளுக்காகவும் உச்ச நீதிமன்றத்தில் 661/2012 மற்றும் 663/212 ஆம் இலக்க வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருவதன் காரணமாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதுள்ளது. தற்பொழுது வழக்கு முடிவடைந்துள்ளதால் 2020 யூன் 12 ஆந் திகதி திறமை அடிப்படையில் 34 பதவியுயர்வுகளுக்காக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 51 பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கு மேலதிகமாக மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 17 மதுவரி பரீட்சகர்கள் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | வருவதுடன் எஞ்சிய 38 பதவிகளுக்காக ஆட்சேர்க்கும் நடவடிக்கை திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் கிடைத்த பின்னர் மேற்கொள்ளப்படும். |
| (இ) | 7 உற்பத்திக் கம்பனிகளுக்குரிய வடிசாலைகள் மற்றும் உற்பத்திச் சாலைகளுக்காக மதுவரி உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தும் போது அங்கீகரித்த எண்ணிக்கையை மிகைத்து 4 மதுவரி உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக மூன்று நபர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு அங்கீகரித்த பதவியணியினர் களை மாத்திரம் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல். | அதிக மதுவரி வருமானம் கிடைக்கின்ற உற்பத்திக் கம்பனிகளின் சேவைக்காக மேலதிகமாக பதவியணியினர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். |